மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

முன்னிலை : - **திருமதி.A. சீதாலெட்சுமி, M.A.,B.L.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர், நீடாமங்கலம்

மாவட்ட உரிமையியல் நீதிபதி , மன்னார்குடி (முழு கூடுதல் பொறுப்பு)

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ சோபகிருது வருடம் பங்குனித்திங்கள் 30 ஆம் நாள்

**இடைநிலை மனு எண். 311/2023 -ல்**

**அசல் வழக்கு எண். 13/2013**

மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன், நெ. 13, பெரிய கம்மாளத்தெரு என்ற முகவரியில் வசிக்கும் ரெங்கராஜன் குமாரர், இந்து, 45 வயதுள்ள கோவிந்தராஜன்.

.... மனுதாரர்/ பிரதிவாதி

**// எதிர்//**

மன்னார்குடி முன்சிபி மற்றும் டவுன், பாலகிருஷ்ணநகர் என்ற முகவரியில் வசிக்கும் வேம்புக்கண்ணு தஞ்சிராயர் குமாரர், இந்து, சிவமதம், 68 வயதுள்ள டாக்டர்.எஸ்.ஆர்.வி.தங்கமணி.

..எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுவானது மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் இம்மனுவுடன் கொடுத்துள்ள ஆவணத்தை தாக்கல் செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தை மன்னித்து இப்போது அங்கீகரித்துக்கொள்ள உத்தரவிடக்கோரி உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 8 விதி 1(ஏ 3)சிபிசின் கீழ் மனுதாரர்/பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**இம்மனு தாக்கல் ஆன நாள்** :- 06.10.2023

**இம்மனு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்** :- 11.10.2023

இம்மனுவின்மீது ரூ. 20/- நீதிமன்றக் கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது.

இம்மனு என் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S. உதயகுமார் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த அரசு வழக்கறிஞர் திரு.V. ரவிச்சந்திரன்அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்கப்பட்டும்,

வழக்காவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்று வரை என் பரிசீலனையிலிருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**<u>தீர்ப்பாணை உத்தரவு</u>**

01. இம்மனுவானது அனுமதித்து உத்தரவிடப்படுகிறது.

02. செலவுத்தொகை இல்லை.

2024 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 12-ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டன.

(ஒ/ம்.A. சீதாலெட்சுமி)

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

மன்னார்குடி.(முகூபொ)